அதற்குப்பதில் இங்கேயே உற்பத்தி செய்யலாமா என்பதை அரசாங்கம் பரிசீலித்தது. அண்மையிலே பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டது. அவர்கள் சொல்வதெல்லாம், இங்கே உற்பத்தி செய்து அந்த நாட்டில் கப்பலிலே இறங்கும் பொழுது அங்கேயுள்ள டிசைன்ஸ் அண்ட் மார்க்கெட்டிங் நேச்சர் மாறிவிடு கிறது, எனவே தோலாகவே தாருங்கள் என்று சொல்கிருர்கள். இருந்தாலும் அரசாங்கம் புனராலோசனை செய்து வருகிறது.

கட்டடக் கற்கள் வெட்டி எடுக்க உரிமம்.

*522 வினு—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடு கட்டுவதற்குத் தோண்டி எடுக்கப்பட்கின்ற கருங்கல் (குவாரி) க்கு ரெவின்யூ இலாக்காவின் மூலம் வரி வசூலிக்கப்படுகின்றதா ?

(இ) ஆம் என்ருல், எந்த அடிப்படையில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம். கட்டட கற்களையும் பிற சிறு கனிப்பொருள்களையும் வெட்டி எடுப்பதற்கு அனுமதியளிப்பதற்கும் அதற்கான உரிமைத்தொகை வசூலிப்பதற்கும் தமிழ்நாடு சிறுகனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959 விதி 3-ன்படி வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமத் தொகை தமிழ்நாடு சிறு கனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959-ல் பின் இணைப்பு இரண்டின்படி விதிக்கப்படுகிறது. இவ்வுரிமத் தொகை ஒரு வண்டி ஒழுங்கு படுத்தப்படாத கல்லுக்கு 25 பைசா விதமும், உளியினுல் சீராக்கப்பட்ட ஒரு வண்டி கல்லுக்கு 50 பைசா விதமும் விதிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த குவாரியிங் ஸ்டோன்ஸ் விடுவது ஏலத்தில் விடப்படுகிறதா அல்லது அரசாங்கமே நிர்ணயம் செய்து விடப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது புதிதாக இயற்றி இருக்கும் விதிகளின்படி விளம்பரம் செய்யப்பட்டு, யார் யார் மனுதாரர்கள் என்று பார்த்து ஒரு மனுதாரருக்கு மேல் இருக்குமானுல் ஆக்ஷனில் விட வேண்டு மென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

செயற்கைப்பட்டு நூல் விநியோகம்

*523 வினு—திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கு செயற்கைப்பட்டு நூல்களை விநியோகம் செய்யும் முறை மண்டல தனியார் குழுவில் இருந்து வருவதை மாற்றி அரசாங்கம் நேரடியாக நெசவாளர்களுக்கு வழங்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) மேற்படி மண்டல கமிட்டி Regional Committee முறையான விநியோகம் செய்யவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) &(இ) ஆம்.